தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1972 டிசம்பர் 15

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

வெள்ளிகுறியிட்ட வினாக்கள்

உருது பயிற்றுமொழிப் பள்ளிகளுக்கு மானியம்

* 181 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உருதுமொழி பாடசாலைகளுக்கு அரசாங்கம் மானியம் ஏதும் வழங்குகிறதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஆசிரியர்களின் மாத ஊதியம் பூராவும் முழு மானியமாக கொடுக்கப்படுகிறது. விதி முறைகளின்படி நிர்வாக மானியமும் வழங்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: அண்மைக்காலத்தில் தமிழ்மொழி போதிக்கின்ற இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் முதல்நிலை தமிழாசிரியர்கள் பதவிக்கு உயர்த்தப்பட்டு வருகிறார்கள். அதேநேரத்தில் உருது மொழி போதிக்கக்கூடிய முதல் நிலை ஆசிரியர்கள்கூட—திருச்சி போன்ற இடங்களில்—இரண்டாம் நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்களே, இது எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது? இந்தக் குறையை அகற்றி அவர்களையும் முதல்நிலைக்கு உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதல்நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கப்படுவதற்குரிய தகுதியைப் பெற்று இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களை

[1972 டிசம்பர் 15

ஆண்டுக்கு இவ்வளவு பேர் என்கிற அடிப்படையில் முதல்நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு செய்யப்படுகிறார்கள். உருது போதிக்கின்ற ஆசிரியர்களின் விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. அது பற்றி தனிக் கேள்வி போட்டால்—உருது போதிக்கின்ற ஆசிரியர்கள் எங்கெங்கே எவ்வளவுபேர்கள் இருக்கிறார்கள் என்பது அறிந்து அது விவரம் அளிக்க முடியும்.

திரு. என். கிட்டப்பா : உருதுமொழி பாடசாலைகளுக்கு அரசாங்கம் எந்த அளவுக்கு மானியத் தொகை அளிக்கிறதோ அது போல தமிழல்லாத மற்ற மொழி போதிக்கும் பாடசாலைகளுக்கும் அரசாங்கம் மானியம் அளிக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : திருச்சியிலுள்ள முஸ்லீம் மகளிர் கல்லூரியில் முதல்நிலை உருது ஆசிரியர் ஒருவர் இரண்டாம் நிலைக்கு தாழ்த்தப்பட்டிருக்கிறார். சென்னை ஒபர்ட் உயர்நிலைப் பள்ளியில் முதல்நிலை முன்ஷியாகப் பணியாற்றி வந்திருப்பவரை, இரண்டாம் நிலைக்குத் தாழ்த்தியிருக்கிறார்கள். இது எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது ? இதனால் உருதுமொழி போதிக்கும் ஆசிரியர் உருதுமொழி பேசும் மக்களிடையே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசு தமிழ்மொழி பேசும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை இவர்களுக்கும் வழங்கி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி பரிகாரம் தேடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை, தனிக் கேள்வி போட்டால் விவரங்களை சேகரித்து அளிக்கலாம்.

Telugu teachers

* 182. *Q.*—Thiru B. VENKATASWAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of Secondary Grade passed teachers who are now working as Grade II Telugu Pandits in Government High Schools of Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 19.